**இந்து தமிழ் திசை (12.04.2025)**



கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் சாந்தியிடம் போர்ட்டபிள் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனரை வழங்கிய தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன பொது மேலாளர் (மனித வளம்) கே.கலைச்செல்வன்.

# டிஎன்பிஎல் சார்பில் கால்நடை துறைக்கு போர்ட்டபிள் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர்

**கரூர்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) சமுதாய நலப்பணித் திட்டத்தின் (சிஎஸ்ஆர்) கீழ் கால்நடை விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து இலவச கால்நடை மருத்துவ முகாம்களை நடத்துதல் மற்றும் கால்நடைகளுக்கு இலவச ஊட்டச்சத்து மாவு வழங்குதல் போன்றவற்றை செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒருபகுதியாக கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக கால்நடைகளுக்கான நோய்களை கண்டறிந்து சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கவும், அதன் மூலம் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்தி இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காகவும், பால் உற்பத்தியை பெருகவும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.4.5 லட்சம் மதிப்புடைய போர்ட்டபிள் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் இயந்திரம் அண்மையில் வழங்கப்பட்டது.

**தினமணி (10.04.2025)**

# புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் கால்நடைத் துறைக்கு 'அல்ட்ரா சவுண்ட்' கருவி



கரூரில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் சாந்தியிடம் 'அல்ட்ரா சவுண்ட்' கருவியை ஒப்படைத்த டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன். உடன் ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் உள்ளிட்டோர்.

**கரூர், ஏப்.9:** கரூர் மாவட்ட கால்நடைத்துறைக்கு ரூ.4.50 லட்சம் மதிப்புள்ள 'அல்ட்ரா சவுண்ட்' கருவியை டிஎன்பிஎல் ஆலை புதன்கிழமை வழங்கியது.

கரூர் மாவட்டம் புகழூர் காகித ஆலையின் சமுதாய பங்களிப்புத் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.4.50 லட்சம் மதிப்புள்ள அல்ட்ரா சவுண்ட் கருவி வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன் தலைமைவகித்து, கால்நடை பராமரிப்புத்துறையின் மண்ட இணை இயக்குநர் மருத்துவர் சாந்தியிடம் அல்ட்ரா சவுண்ட் கருவியை ஒப்படைத்தார்.

நிகழ்ச்சியில் ஆலையின் முதன்மைமேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், கால்நடை பராமரிப்புத்துறையின் உதவி இயக்குநர்கள் உமாசங்கர், லில்லி அருள்குமாரி, கால்நடை மருத்துவர் ஆர்.சுதா ஆகியோர் பங்கேற்றனர்.

**தினகரன் (10.04.2025)**

### டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில்

# கால்நடை பராமரிப்பு துறைக்கு ரூ.4.5 லட்சம் மதிப்பில் உபகரணம்



▶ கால்நடை பராமரிப்புத்துறைக்கு டிஎன்பிஎல் சார்பில் மருத்துவ உபகரணங்களை பொது மேலாளர் கலைச் செல்வன் வழங்கினார். அருகில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் சாந்தி, முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார்.

வேலாயுதம்பாளையம், ஏப்.10: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.4.50,000மதிப்புடைய உபகரணம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைமேம்படுத்துவதற்காக மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து இலவச கால்நடை மருத்துவ முகாம்களை நடத்துதல் மற்றும் கால்நடைகளுக்கு இலவச ஊட்டச்சத்து மாவு வழங்குதல் போன்றவற்றை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, கால்நடைகளுக்கான நோய்களை கண்டறிந்து சிறப்பான முறையில் சிகிச்சை அளித்திடவும், அதன் மூலம் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்தி இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காகவும். உற்பத்தியை மேம்படுத்து

வதற்காகவும், பெருக்கிடவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத்துறைக்கு ரூ.4.50,000/- மதிப்புடைய மருத்துவ உபகரணங்களான *Portable Utrasound Scanner* இயந்திரம் வழங்கப்பட்டது. அன்று தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். நிகழ்ச்சியில், கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் சாந்தி இந்நிகழ்ச்சியில் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர்கள், டாக்டர்கள் உமாசங்கர், லில்லி அருள்குமாரி மற்றும் கால்நடை மருத்துவர் சுதா ஆகியோர் கலந்து கொண்டனர்.